உடனடி வெளியிட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகரின் மிக முக்கியமான திட்டப்பணிகள்பற்றி கருத்துக் கூற நகரவாசிகள் வரவேற்கப்படுகிறார்கள்

ப்ராம்ப்ட்டன், ON (ஜூலை 7, 2020) – ப்ராம்ப்ட்டன் நகரமானது வளர்ச்சி பெற்ற வண்ணம் இருக்கிறது மற்றும் வரவிருக்கும் ஆண்டுகளில் மாநகரம் எப்படி தோற்றமளிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் குடியிருப்புவாசிகள் முக்கிய பங்காற்றுகிறார்கள். ஜூலை மாதத்தில், புதிய மற்றும் பரவசமூட்டுகின்ற ஐந்து திட்டப்பணிகள் பற்றி தங்கள் கருத்தினைக் கூறும் வாய்ப்பு நகர வாசிகளுக்கு உள்ளது.

குடியிருப்புவாசிகள் ஈடுபடக்கூடிய, தற்போதைய, அனைத்து வாய்ப்புக்களும் பட்டியலிடப்பட்டிருக்கும் இடம்: www.brampton.ca/engage.

### லைட் ரெயில் ட்ரான்ஸிட் (Light Rail Transit ) நீட்டிப்பு

லைட் ரெயில் ட்ரான்ஸிட் [Light Rail Transit (LRT)] நீட்டிப்பு பற்றிய தங்களின் கருத்துக்களை வழங்க மெய்நிகர் திறந்த நிலை காட்சியகத்திற்கு ஜூலை மாதம் 31 ஆம் தேதி வரை வருகை தர குடியிருப்புவாசிகள் உற்சாகம் அளிக்கப்படுகிறார்கள். மெயின் ஸ்ட்ரீட் –இல் திட்டமிடப்பட்ட ஹுரான்ட்டோரியோ எல் ஆர் ட்டி (Hurontario LRT) யை ஸ்டீல்ஸ் அவென்யூவில் இருக்கின்ற ப்ராம்ப்ட்டன் கேட்வே டெர்மினலில் இருந்து ப்ராம்ப்ட்டன் கோ ஸ்டேஷன் வரை நீட்டிப்பது என்பது மிக முக்கியமான போக்குவரத்து முன்னுரிமை கொண்ட மற்றும் நகரின் கட்டுமான வளர்ச்சிப்பணியாகும். இயற்கையான, சமூகரீதியான, பொருளாதார மற்றும் கலாச்சார சூழல் மற்றும் அத்துடன்போக்குவரத்தின் இதர காரனிகளின் அடிப்படையில் விருப்ப முன்னுரிமை கொண்ட ஒரு வழித்தடமானது பரிந்துரைக்கப்படும்.

### வில்லியம்ஸ் பார்க்வே (Williams Parkway) பற்றிய மீள்பார்வை

நகர நிர்வாகமானது குடியிருப்புவாசிகளின் தேவையை நிறைவேற்றுவதற்காக சாலைகளை அமைக்கிறது. வில்லியம்ஸ் பார்க்வே Williams Parkway பற்றிய ஒரு கருத்தாய்வு ஆகஸ்ட் 1 வரை இருந்துவரும். தங்களுக்கு எது மிக மிக முக்கியம் என்று குடியிருப்புவாசிகள் கருத்து கூறலாம், அவையாவன: பாதசாரிகளுக்கான அகலமான நடைபாதை, இருசக்கர வாகன ஓட்டிகளுக்கான பாதுகாப்பான பாதை, கார்களுக்கென தனித்து அர்ப்பணிக்கப்பட்ட அதிக அகலம் கொண்ட சாலை.

### வோட்டென் ஸ்ட்ரீட் ஈஸ்ட்/வெஸ்ட் மிதிவண்டிகளுக்கான ஓடுதளம்

*ப்ராம்ப்ட்டன் 2040 தொலைநோக்குப்பார்வை* (Brampton 2040 Vision) யின் மிக முக்கியமான முன்னுரிமை கொண்ட விஷயமாகக் கருதப்பட்ட, கிழக்கு மேற்கு ஆகிய பகுதியின் ஓடுபாதைகளை இணைக்கின்ற, தொடர்ச்சியான மற்றும் தனித்து கொடுக்கப்பட்ட மிதிவண்டி ஓடுபாதையை நகர நிர்வாகம் நிர்மாணித்து வருகிறது. இந்த மிதிவண்டி ஓடுபாதையானது மிகவும் பாதுகாப்பானதும் வசதியானதுமான ஓடுபாதைகளை மிதி வண்டி ஓட்டுபவர்களுக்கு வழங்குவதுடன், தெற்கு மற்றும் வடக்கில் உள்ள ஓடுபாதைகளுடன் இணைவதற்கான அணுகலையும் கொடுக்கிறது. குடியிருப்பு வாசிகள்

இதுபற்றி மேலும் அறிந்துகொண்டு, வோட்ட்ன் ஸ்ட்ரீட், ஹவ்டன் புலிவார்டு மற்றும் ஹனோவர் ரோட் ஆகியவற்றில் இருக்கின்ற சுமார் 7 கிலோமீட்டர் நீளம் கொண்ட மிதி வண்டி ஓடுபாதைகள் பற்றி தங்கள் கருத்துக்களைப் பகிரலாம். இந்தக் கருத்தாய்வில் ஜூலை மாதம் 31 ஆம் தேதி வரை கருத்துக்களைக் கூறலாம்.

**மூன்றாவது பேருந்து போக்குவரத்து வசதி (Third Transit Facility)**

ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து என்பது, கனடா நாட்டின் மிகவும் விரைவாக வளர்ந்து வரும் போக்குவரத்து வலைப்பின்னல்களில் ஒன்றாகும். தேவையின் பேரில் ஏற்படும் வளர்ச்சியுடன் ஒத்துப்போகும் வகையில், நகர நிர்வாகமானது மூன்றாவதாக ஒரு பேருந்து பராமரிப்பு மற்றும் இயக்ககப் பணிமனையை அமைக்க திட்டமிட்டுவருகிறது. இதுபற்றிய மெய்நிகர் காட்சியகம் ஒன்று ஆன்லைனில் ஜூலை 15 ஆம் தேதி வரை காணக் கிடைக்கப்பெறும்; இதில் திட்டப்பணிபற்றி நிறையத் தெரிந்துகொண்டு கருத்துக்கள் தெரிவிக்கலாம்.

**சுற்றுலாவுக்கான யுக்தி**

குடியிருப்புவாசிகள், வருகையாளர்கள், திட்டப்பணியில் பங்கேற்போர் ஆகியோர் நகரின் முதன்முதலான சுற்றுலாவுக்கான யுக்தி பற்றி தங்கள் கருத்துக்களைக் கூற அழைக்கப்படுகிறார்கள். இந்த யுக்தியானது, ப்ராம்ப்ட்டன் நகரின் குறுகியகால மற்றும் நீண்டகால வளர்ச்சிக்காக, பொருளாதார மீட்சி பற்றியும் மற்றும் ”உள்ளூரிலேயே அனைத்தும்” என்பதுடன் ஒத்துப்போகும் விதமான நகரின் பொருளாதார மீட்சிக்கான யுக்தி பற்றியும் கவனம் செலுத்தும். சுற்றுலாவுக்கான யுக்தியானது, உள்நாட்டு சுற்றுலாவை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை இனம் கண்டறியும். ஈடுபடுதலுக்கான சந்தர்ப்பங்கள் என்பவற்றில், ஜூலை மாதம் 20 ஆம் தேதி வரை நடத்தப்பட இருக்கும் ஒரு கருத்தாய்வும், மற்றும் ஜூலை மாதம் 14 ஆம் தேதி மாலை 7 மணிக்கு நடைபெறவிருக்கின்ற, பொதுமக்கள் கலந்துகொள்ளுகின்ற, மெய்நிகர் ஆலோசனைக் கூட்டம் ஆகியன அடங்கும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“நாங்கள் செய்யும் அனைத்துமே நமது குடியிருப்புவாசிகளை மனத்தில் வைத்தே செய்யப்படுகின்றன; பசுமையான, ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான பலவண்ணக்கலவை மக்கள் கொண்ட நகரத்தை தொடர்ந்து நிர்மாணிப்பதில் அவர்களின் கருத்துக்கள் அத்தியாவசியமாகும். பொதுமக்களின் ஈடுபாடு அவசியமாகின்ற இந்த வாய்ப்புக்களில் பங்கேற்கவும், மற்றும் நகரில் மேற்கொள்ளப்பட்டுவரும் உருமாற்றம் கொடுக்கின்ற திட்டப்பணிகள் பற்றி மேலும் தெரிந்து கொள்ளவும், ப்ராம்ப்ட்டன் வாசிகள் அனைவரையும் நான் ஊக்குவிக்கிறேன்.”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் மாநகர நிர்வாகத்தினருக்கு நகர சமுதாயத்தின் சுகாதாரம் மற்றும் நல வாழ்வே அதிமுக்கியத்துவம் வாய்ந்த விஷயமாக இருந்து வருகிறது; கோவிட்-19 தொற்றுப் பரவல் காலத்தின்போது நமது நகர வாசிகளுக்கு சேவையாற்ற புதுப்புது வழிகளை நாங்கள் தொடர்ந்து கண்டுபிடித்து வருகிறோம். நாங்கள் செய்யும் பணிகளில் சமுதாயத்தினரின் உள்ளீடுகளும் அவசியம்; மக்கள் தங்கள் வீடுகளில் இருந்தபடியே இந்த மெய்நிகர் காட்சிகளில் மற்றும் கருத்தாய்வுகளில் கலந்து கொண்டு பார்த்து தங்கள் ஈடுபாட்டைக் காட்டலாம்”

*- டேவிட் பேர்ரிக். தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**ஊடகத் தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கினைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca